SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஜுலை - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

0% Effort | 100% Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# ஜூலை - 2018

## தமிழ்நாடு

1) **சிற்பி அறக்கட்டளை விருதுகள்:**

| | | |
|---|---|---|
| ➢ **சிற்பி இலக்கிய விருது** | - | கவிஞர் மகுடேஸ்வரன் |
| ➢ **பொ.மா. சுப்பிரமணியம் விருது** | - | ஹரி கிருஷ்ணன் |

2) **P. சண்முகம் குழுவின்** பரிந்துரையின்படி, சென்னை பாரிசில் (Parrys, Chennai) உள்ள டாக்டர்.அம்பேத்கர் சட்டக் கல்லூரியானது, காஞ்சிபுரம் மாவட்டம் புதுப்பாக்கத்திற்கும் திருவள்ளூர் மாவட்டம் பட்டறைப் பெரும்புதூருக்கும் இடமாற்றம் செய்யப்பட உள்ளது. இதில் ஐந்து வருட படிப்புகள் புதுப்பாக்கத்திலும், மூன்று வருட வகுப்புகள் பட்டறைப் பெரும்புதூரிலும் நடத்தப்பட உள்ளன.

3) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராகப் பதிவு செய்த **S.விஜி,** என்பவர் **சத்யஸ்ரீ ஷர்மிளாவுக்குப்** பிறகு வழக்கறிஞராகப் பதிவு செய்த **இந்தியாவின் இரண்டாவது திருநங்கை** (Transgender) என்ற சிறப்பினைப் பெறுகிறார்.

4) சென்னையிலுள்ள **ஷெனாய் நகர் மற்றும் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையங்கள்** முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

5) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழக சுற்றுலாத் துறையானது முதல் இடத்தில் உள்ளது.

6) **கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அஞ்செட்டி (Anjetti)** அருகே தொன்மை வாய்ந்த **இசைப் பாறையானது** (Old Music Rock) தொல்லியலாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப்பாறையானது 2500 ஆண்டுகளுக்கு முன்பு பழைய கற்கால மனிதர்களால் (Old stone age people) பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

7) **ஐந்திணைப் பூங்கா :** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற சங்க காலத் தமிழகத்தின் ஐந்திணைகள் பற்றிய செய்திகளை வருங்கால தலைமுறையினருக்குக் கற்பிப்பதற்காக ஐந்திணைப் பூங்காவானது **தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்** நிறுவப்பட உள்ளது.

8) வண்டலூர் உயிரியியல் பூங்காவில் பிறந்த புதிய **புலிக்குட்டிக்கு** முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களை நினைவு கூறும் வகையில், தமிழக முதல்வரான எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் **'ஜெயா' (Jaya)** என்று பெயரிட்டார்.

9) திருவள்ளூர் மாவட்டத்தின் பேரம்பாக்கம் கிராமத்திலுள்ள பெண்கள் **பாரம்பரிய விதைகள் திருவிழாவினைக்** (Heritage Seed Festival) கொண்டாடினர்.

10) தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையமானது (National Tiger Conservation Authority) **திருவல்லிபுத்தூர் - மேகமலை** (Srivilliputhur - Megamalai) வனப்பகுதியை, **புலிகள் காப்பக வனப்பகுதியாக** (Tiger Reserved Forest) அறிவிக்கத் திட்டமிட்டுள்ளது.

11) சென்னையிலுள்ள மாதவரத்தில் **'மீன்கள் ஊட்டச்சத்து மற்றும் உணவுத் தொழில்நுட்ப நிறுவனம்'** (Fish Nutrition and Food Technology Institute) அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனமானது தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் (Tamil Nadu Dr. J. Jayalalitha Fisheries University) கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

12) தமிழக சட்டசபையானது 2018 **ஜூலை** 9 அன்று **தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்ட முன்வரைவுக்கு** (Tamil Nadu Lokayukta Bill, 2018) ஒப்புதல் வழங்கியது. இச்சட்டமானது, 2018 **ஜூலை** 10 முதல் நடைமுறைக்கு வந்தது.

13) **புதைபடிவ அருங்காட்சியகமானது** (Fossil Museum) **அரியலூரை அடுத்த வாரண வாசியில்** அமைக்கப்பட உள்ளது.

14) தமிழகத்தின் **முதலாவது வனக்கொள்கையினை** (Tamilnadu Forest Policy 2018) 2018 **ஜூலை** 24 அன்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வெளியிட்டுள்ளார். தற்போது 21.76 சதவீதமாக உள்ள தமிழகத்தின் வனப் பரவலை (Forest Cover) 2030ஆம் ஆண்டுக்குள் 33 சதவீதமாக உயர்த்துவதே இக்கொள்கையின் குறிக்கோள் என்று தமிழக வனத்துறை வரையறுத்துள்ளது.

## தேசம்

1) **ஆந்திரப் பிரதேச அரசானது** ஏழை மக்களுக்கு மானிய விலையில் உணவு வழங்கிட **'அண்ணா உணவகம்'** (Anna Canteens) என்ற திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. பிற மாநிலங்களில் உள்ள மானிய விலை உணவகங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ➢ **அம்மா உணவகம்** | தமிழ்நாடு (24.02.2013) |
| ➢ **அன்னபூர்னா ராசோய் உணவகம்** (Annapurna Rasoi Canteen) | இராஜஸ்தான் |
| ➢ தீன் தயாள் அன்னபூர்னா ராசோய் உணவகம் | மத்தியப்பிரதேசம் |
| ➢ ஆம் ஆத்மி உணவகம் | டெல்லி |
| ➢ இந்திரா உணவகம் | கர்நாடகா |
| ➢ இந்திரா அம்மா உணவகம் | உத்தரகாண்ட் |
| ➢ ஆகார் யோஜனா | ஒடிசா |
| ➢ அந்த்யோதயா ஆகார் யோஜனா (Antyodaya Aahaar Yojana) | ஹரியானா |

2) **மேற்கு வங்க மாநில அரசானது** தனது மாநிலத்தின் பெயரை **'பங்ளா' (Bangla)** என்று மூன்று அலுவல் மொழிகளிலும் (ஆங்கிலம், இந்தி மற்றும் வங்காளம்) மாற்றியமைப்பதற்கான தீர்மானத்தினை 2018 **ஜூலை** 26 அன்று நிறைவேற்றியது. (அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது விதியானது மாநிலத்தின் பெயரை மாற்றுவது குறித்து விவரிக்கிறது).

3) **உலகிலேயே அதிக அளவில் உடலுறுப்பு தானம்** (Organ donation) செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. மேலும், துருக்கி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்திலும் பிரேசில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

4) 15 வயதே நிரம்பிய **'தனிஷ்க் ஆபிரகாம்' (Tanishq Abraham)** என்கிற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க சிறுவன் மிகவும் இளம் வயதிலேயே பொறியியல் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர உள்ளார்.

5) மத்திய அரசானது **'செல்வமகள் சேமிப்புத் திட்டத்தின்'** (Sukanya Samriddhi Yojana) குறைந்தபட்ச வருடாந்திர வைப்புத்தொகையை **1000 ரூபாயிலிருந்து 250** ரூபாயாகக் குறைத்துள்ளது.

6) அரசியலமைப்புச் சட்டத்தின் விதி.80-ன் படி ராம் ஷகல் (Ram Shakal), ராகேஷ் சின்ஹா, ரகுநாத் மொஹபத்ரா (Ragunath Mohapatra) மற்றும் சோனல் மான்சிங் (Sonal Mansingh) என்னும் நான்கு பேரை மாநிலங்களவை உறுப்பினர்களாகக் குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.

7) மாவட்ட மற்றும் மாநில அளவிலான பொருளாதாரத் தரவுகளைத் திரட்டுவதற்கான விதிமுறைகளை (To upgrade norms for state & district level economic data collection) தரம் உயர்த்துவதற்காக, மத்திய அரசானது **ரவீந்திர H. தோலக்கியா** (Ravindra H. Dholakia Committee) குழுவினை நியமித்துள்ளது.

8) திரிபுராவிலுள்ள **அகர்தலா விமான நிலையத்தின்** பெயரை **'மகாராஜா வீர் விக்ரம் மாணிக்யா கிஷோர் விமான நிலையம்'** (Maharaja Bir Bikram Manikya Kishore Airport) என்று பெயர் மாற்றுவதற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

9) மும்பையிலுள்ள 'எல்ஃபின்ஸ்டோன் சாலை புறநகர் இரயில் நிலையத்தின்' (Elphinstone Road Sub Urban Railway Station) பெயரை **'பிரபாதேவி இரயில் நிலையம்'** (Prabhadevi Railway Station) என்று மேற்கு ரயில்வேயானது பெயர் மாற்றம் செய்துள்ளது.

10) ஆந்திரப் பிரதேசத்தின் **விசாகப்பட்டினத்தில் 'விளையாட்டு வடிவமைப்பு பல்கலைக்கழகத்தினை'** (Design University for Gaming) அமைப்பதற்கு **யுனெஸ்கோ** (UNESCO) திட்டமிட்டுள்ளது.

11) இந்திய விமான நிலைய ஆணையகமானது (Airports Authority of India) மிகச்சிறந்த தொழில்நுட்பத்துடன் கூடிய **'சிவில் விமானப் போக்குவரத்து ஆராய்ச்சி நிறுவனத்தினை'** (Civil Aviation Research Organisation) **ஐதராபாத்தின் பேகும்பேட்** விமான நிலையத்தில் (Begumpet Airport) அமைக்க உள்ளது.

12) தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஆங்கில மொழியை சுலபமாகக் கற்றுக் கொள்வதை உறுதி செய்யும் பொருட்டு **ஹரியானா மாநில அரசானது "I am not afraid of English"** என்னும் முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

13) **மின் கழிவுகளை மறு சுழற்சி செய்வதில்** மிகச் சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்டு இயங்கும் (State of the art e-waste recycling unit) **இந்தியாவின் முதலாவது நகரம் பெங்களூர்** ஆகும்.

14) மாற்றுத்திறனாளிகளுக்காக தனி இயக்குநகரத்தினை (Separate directorate for the Divyangs) அமைத்திட **அசாம் மாநில அரசு** முடிவு செய்துள்ளது.

15) உத்தரப்பிரதேசத்தின் நொய்டாவில் **உலகிலேயே மிகப்பெரிய கைபேசித் தொழிற்சாலையினை** (World's largest mobile phone factory) **சாம்சங்** நிறுவனமானது அமைத்துள்ளது.

16) **மேகாலயாவிலுள்ள** ஜெயிந்தியா மலை மாவட்டத்தின் தலைநகரான ஜோவாயில் (Jowai, Jaintia Hill District) **'பெய்தின்க்லாம் 2018'** (Behdienkhlam 2018) என்ற மிகவும் பிரபலமான பண்பாட்டுத் திருவிழா நடைபெற்றது.

17) முற்றிலும் டிஜிட்டல் முறையில் அமைந்த உலகின் முதலாவது கலை அருங்காட்சியகமானது (World's first all-digital art museum) **ஜப்பானின் டோக்கியோ நகரத்தில்** உள்ள மோரி கலை அருங்காட்சியகக் கட்டிட வளாகத்தில் (MORI Building Digital Art Museum) அமைக்கப்பட்டுள்ளது.

18) **மேற்கு வங்காளம்** மற்றும் **மகாராஷ்டிரா மாநில** அரசுகளைத் தொடர்ந்து மூன்றாவது மாநிலமாக **குஜராத் மாநில அரசானது, யூத இன மக்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்தினை** (Minority Status for Jews) வழங்கியுள்ளது.

19) பொதுமக்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தவும் வாழ்க்கைமுறை தொடர்பான நோய்களை (Life style diseases) கட்டுப்படுத்தவும் இந்திய **'உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது' (FSSAI) 'சரியானதை உண்போம்'** என்னும் பிரச்சாரத்தினைத் (The Eat Right Movement) தொடங்கியுள்ளது.

20) மத்திய நீர் வளங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை நதி புனரமைப்புக்கான அமைச்சகமானது (Union Ministry of Water Resources, River Development and Ganga Rejuvenation) **"ஜல் பச்சாவோ, வீடியோ பனாவோ, புருஸ்கர் பாவோ"** (Jal Bachao, Video Banao, Puruskar Pao) என்னும் காணொளிக் காட்சிப்

போட்டியைத் (Video Contest) தொடங்கி வைத்துள்ளது. இந்தப் போட்டியானது நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை (Water Conservation and Management) தொடர்பான செயல்பாடுகளில் பொது மக்களை இணைத்துக் கொண்டு செயல்படுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

21) **இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின்** (Archaeological Survey of India) புதிய தலைமையகக் கட்டிடமான **'தாரோகர் பவனை'** (Dharohar Bhawan) பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

22) 171 கி.மீ. நீளம் கொண்ட **பன்சாகர் கால்வாய் நீர்ப்பாசனத் திட்டத்தினை** (Bansagar Canal Project) **உத்தரப்பிரதேசத்தின் மிர்சாபூரில்** இருந்து பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இத்திட்டமானது, **உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார்** ஆகிய மூன்று மாநிலங்களும் இணைந்து நடைமுறைப்படுத்தும் திட்டமாகும்.

23) புதிய மரக்கன்றுகளை நடுவதற்காக **ஹரியானா** மாநில அரசானது **'பவுதாகிரி பிரச்சாரம்'** (Paudhagiri Campaign) என்னும் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.

24) மத்திய புவி அறிவியல் அமைச்சகமானது (Ministry of Earth Sciences) மிகச் சிறந்த தொழில்நுட்பத்துடன் கூடிய **'காற்றின் தரம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு செய்யும் அமைப்பான' SAFAR** (System of Air Quality and Weather Forecasting)-ஐ தில்லியிலுள்ள சாந்தினி சௌக்கில் (Chandhi Chowk) அமைத்துள்ளது. இந்த அமைப்பானது புனேயிலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தினால் (IIM - Pune) வடிவமைக்கப்பட்டதாகும்.

25) **ஒடிசா மாநில அரசானது** நாட்டிலேயே முதன்முறையாக அம்மாநிலத்திலுள்ள பழங்குடி மக்களின் மக்கட்தொகை மற்றும் பண்பாட்டு விவரங்கள் உள்ளடங்கிய **'பழங்குடியினருக்கான நில வரைபடத் தொகுதியினை'** (Tribal Atlas of Odisha) வெளியிட்டுள்ளது.

26) காதிப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காக **ஜார்க்கண்ட் மாநில** அரசானது இந்தியாவிலேயே முதன்முறையாக காதிப் பொருட்களுக்காகவே முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட **'காதி வளாகத்தினை'** (Dedicated Khadi mall) உருவாக்கியுள்ளது.

27) இந்தியாவின் முன்னாள் பிரதம அமைச்சர்கள் அனைவருக்குமான நினைவு அருங்காட்சியகமானது (The Museum for all former Prime Ministers of India) புது தில்லியிலுள்ள **'தீன் மூர்த்தி பவன் வளாகத்தில்'** (Teen Murti Bhawan Complex) அமைக்கப்பட உள்ளது. இந்த தீன் மூர்த்தி பவன் வளாகத்தில் தான் நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம் (Nehru Memorial Museum and Library) அமைந்துள்ளது.

28) **ஹரியானா** மாநிலத்திலுள்ள **'கோடிகன் ஊராட்சியானது'** (Godikan Panchayat) கழிப்பறை வசதியுள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பெண்களை மணமுடித்து வைக்கும் வகையிலமைந்த **'கழிப்பறை வசதி இல்லையேல் மணமகள் கிடையாது' (No Toilet, No Bride)** என்ற பிரச்சாரத்தினை நாட்டிலேயே முதன்முறையாக ஆரம்பித்து வைத்துள்ளது.

29) ஆட்களைக் கடத்துதல் மசோதாவானது [Trafficking of Persons (Prevention, Protection and Rehabilitation) Bill, 2018], ஆட்கள் கடத்தப்படுதலைத் தவிர்த்தல், கடத்தப்பட்ட நபர்களை மீட்டல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியது ஆகும். கடத்துதலில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு 7 ஆண்டுகளாக இருந்த தண்டனையானது 10 ஆண்டுகளாகவும் அபராதத் தொகை 11 லட்ச ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

30) குற்றவியல் சட்டங்கள் தொடர்பான சட்டத்திருத்த மசோதாவானது [Criminal Law (Amendment) Bill, 2018], 12 வயதுக்குக் கீழுள்ள பெண் குழந்தைகளை பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்குபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப் பரிந்துரை செய்கிறது.

31) **உத்தரகாண்ட்** உயர் நீதிமன்றமானது பறவைகள், நன்னீர் விலங்குகள் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த விலங்குலகத்தையும் (entire animal kingdom) 'சட்டப்பூர்வமான நபராக' (legal person) அறிவித்து அனைத்து உரிமைகளும் அவைகளுக்குப் பொருந்தும் என்ற வகையில் தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பானது விலங்குகளின் மேம்பட்ட பாதுகாப்பினையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதாக அமைகிறது.

32) மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் விழாவினையொட்டி **'மகாத்மா காந்தி சர்வதேச சுகாதார மாநாடானது'** (Mahatma Gandhi International Sanitation Convention) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது முதன் முறையாக, சுகாதாரத்துக்காக நடத்தப்படும் உலகளாவிய மாநாடாகும்.

33) இரயில்வேயின் ஒவ்வொரு ஊழியரும் தங்களது பொது வாழ்வு மற்றும் தனிப்பட்ட வாழ்வில் அறிவியல் விழுமியங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்திய இரயில்வேயானது **'சத்யநிஷ்தா திட்டத்தினைத்'** (Mission Sathya Nishtha) தொடங்கியுள்ளது. இந்தத் திட்டமானது இந்திய ரயில்வேயால் நடத்தப்பட்ட **"பொது ஆளுகையில் அறவியல்"** (Ethics in Public Governance) என்னும் நிகழ்வில் தொடங்கப்பட்டதாகும். இதுபோன்றதொரு நிகழ்வினை நடத்தும் முதலாவது அரசு நிறுவனம் இந்திய ரயில்வே மட்டுமேயாகும்.

34) கேரள சுற்றுலா மேம்பாட்டுக் கழகமானது (Kerala Tourism Development Corporation) முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் இந்தியாவின் முதலாவது பெண்களுக்கான பொதுத்துறை உணவு மற்றும் தங்கும் விடுதியினை (India's first

public sector run entirely by women) கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் அமைத்துள்ளது.

35) யுனெஸ்கோவின் 'மனித மற்றும் உயிர்க்கோளத் திட்டத்தின் கீழ்' (Man and Biosphere Programme) உயிர்க்கோளக் காப்பகத்துக்கான சர்வதேச வலையமைப்பில் (World Network of Biosphere Reserve) **கஞ்சன்ஜங்கா உயிர்க்கோளக் காப்பகமானது** (Khangchendzonga Biosphere Reserve) சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வலையமைப்பினுள், இந்தியாவிலிருந்து சேர்க்கப்பட்ட 11வது உயிர்க் கோளக் காப்பகம் இதுவேயாகும்.

36) வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்த ஆழ்வார்களுள் ஒருவரான ஸ்ரீ இராமானுஜாச்சாரியாரின் 216 அடி உயரம் கொண்ட உருவச் சிலையானது ஐதராபாத்தில் திறந்து வைக்கப்பட உள்ளது. **'சமத்துவத்துக்கான சிலை' (Statue of Equality)** என்று அழைக்கப்படும் இச்சிலையானது திறந்து வைக்கப்பட்டால் உட்கார்ந்த நிலையில் உள்ள உலகின் இரண்டாவது மிகப்பெரிய உயரம் கொண்ட சிலையாக (World's second tallest statue in a seated position) இருக்கும். உட்கார்ந்த நிலையில் உலகிலேயே மிகவும் உயரம் கொண்ட சிலையாக தாய்லாந்தின் 302 அடி உயரம் கொண்ட மிகப்பெரிய புத்தர் சிலை (Great Buddha of Thailand) உள்ளது.

## சர்வதேசம்

1) **பிரதமர் மோடியின் ஜூலை மாத வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்:**

| | |
|---|---|
| ➢ **ருவாண்டா (Rwanda)** | தலைநகரம் : கிகாலி (Kigali)<br>அதிபர் : பால் ககாமே (Paul Kagame) |
| ➢ **உகாண்டா (Uganda)** | தலைநகரம் : கம்பாலா (Kampala)<br>அதிபர் : யோவேரி முசேவேனி (Yoweri Museveni) |
| ➢ **தென் ஆப்பிரிக்கா (South Africa)** | தலைநகரங்கள் : கேப்டவுன், பிரிட்டோரியா மற்றும் புளோயம் ஃபோன்டைன் (Bloemfontein)<br>அதிபர் : சிரில் ராமஃபோசா (Cyril Ramaposa) |

2) 2019-ல் நடைபெற இருக்கும் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள வேண்டுமென அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (USA) அதிபரான டொனால்டு டிரம்புக்கு மத்திய அரசானது அழைப்பு விடுத்துள்ளது.

3) பிரதம அமைச்சர் நரேந்திர மோடி, தனது **ருவாண்டா** நாட்டுச் சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக **'கிரிங்கா திட்டத்தின்' (GIRINKA Programme)** கீழ் 200 பசு மாடுகளை அந்நாட்டில் உள்ள ருவேரு கிராம மக்களுக்கு (Villagers from Rweru villages) வழங்கினார்.

4) ஆப்கானிஸ்தான் நாட்டில் **'ஆபரேஷன் நீடித்த சுதந்திரம்' (Operation Enduring Freedom)** என்னும் நடவடிக்கை செயல்பாட்டில் உள்ளது.

5) கொலம்பியாவில் உள்ள **சிரிபிகுவட் தேசிய பூங்காவானது (Chiribiquette National Park)** யுனெஸ்கோவின் உலகப் புராதான இடங்களுள் (UNESCO World Heritage Site) ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

6) 2018 ஜூலை 22 அன்று **ஆம்பில் சூறாவளியானது** (Typhoon Ampil) சீனாவைத் தாக்கியது.

7) நெல்சன் மண்டேலா பிறந்து 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி **(1918 ஜூலை 18) 2018ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாளானது** 'சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக' (Nelson Mandela International Day 2018) கொண்டாடப்பட்டது.

8) இலங்கையின் ஹம்பன் தோட்டாவில் உள்ள **மத்தள இராஜபக்சா சர்வதேச விமான நிலையமானது** (Mattala Rajapaksa International Airport in Hambantota) உலகிலேயே பயணிகளே இல்லாத விமான நிலையம் (World's Emptiest Airport) என்று கருதப்படுகிறது. நஷ்டத்தில் இயங்கும் இவ்விமான நிலையத்தினைப் புனரமைப்பு செய்வதற்காக இலங்கையுடன் இந்தியா கூட்டுமுயற்சியில் ஈடுபட உள்ளது.

9) இலங்கையில் இந்திய உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆம்புலன்ஸ் அவசர ஊர்தி சேவையானது (Ambulance Service) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

10) 2018-ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்கான விருதானது (World Best Airlines 2018) **சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்** நிறுவனத்துக்கு (Singapore Airlines) வழங்கப்பட்டுள்ளது.

## மாநாடுகள் & கருத்தரங்குகள்:

| மாநாடுகள்/ கருத்தரங்குகள் | நோக்கம்/கருத்துரு (Purpose/Theme) | மாநாடு நடைபெற்ற இடம் (Place) | நாள் (Date) |
|---|---|---|---|
| ➢ **10-வது பிரிக்ஸ் மாநாடு (10th BRICS Summit)**<br>• 9வது பிரிக்ஸ் மாநாடு 2017 செப்டம்பரில் சீனாவின் ஜியாமென்னில் நடைபெற்றது.<br>• 11வது மாநாடு 2019ல் பிரேசிலில் நடைபெற உள்ளது. | **கருத்துரு:** "ஆப்பிரிக்காவில் பிரிக்ஸ்: நான்காவது தொழிற் புரட்சியில் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் பகிரப்பட்ட வளமைக்கான ஒருங்கிணைந்த செயல்பாடு"<br>மாநாட்டின் வெளிப்பாடு : "ஜோகன்னஸ்பர்க் பிரகடனம்" | ஜோகன்னஸ் பர்க், தென் ஆப்ரிக்கா | 2018 ஜூலை 25 - 27 |

| | | | |
|---|---|---|---|
| • 12வது பிரிக்ஸ் மாநாடு 2020ல் ரஷ்யாவில் நடைபெற உள்ளது. | | | |
| ➢ **யுனெஸ்கோவின் உலகப் புராதானக் குழுவினுடைய 42-வது அமர்வு** (42nd Session of World Heritage Committee of UNESCO) | நான்கு புராதன இடங்கள் இம்மாநாட்டில் முன்மொழியப்பட்டன:-<br>➢ மும்பையின் விக்டோரிய கோதிக் மற்றும் டெக்கோ கலை பாணி கட்டிடங்கள் (இந்தியா) (Victorian Gothic and Art Deco Ensemble of Mumbai)<br>➢ ஈரானின் ஃபார்ஸ் பகுதியில் (Fars region) உள்ள சாசானிட் தொல்லியல் நில அமைப்பு (Sassanid Archaelogical Landscape)<br>➢ ஜப்பான் நாட்டின் நாகசாகி பகுதியில் மறைந்துள்ள கிறித்துவ புராதான இடங்கள் (Hidden Christian Sites)<br>➢ தென் கொரியாவின் சான்சா (Sansa) பகுதியிலுள்ள புத்த மடாலயங்கள். | மனாமா, பஹ்ரைன் | 2018 ஜூலை 1 |
| ➢ **ஐந்தாவது பிராந்திய பொருளாதார கூட்டு ஒப்பந்த (RCEP) மாநாடு** | இது 10 ஆசியான் (ASEAN) கூட்டமைப்பு நாடுகளுக்கிடையிலான பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்புக்காக முன்மொழியப் பட்டுள்ள ஒப்பந்தமாகும். | டோக்கியோ, ஜப்பான் | 2018 ஜூலை 2 |
| ➢ **இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஆறாவது உலக நகரங்களுக்கான மாநாடு** (6th Biennial World Cities Summit) | **கருத்துரு:** "வாழத்தகுந்த மற்றும் நிலையான நகரங்கள் : புத்தாக்கம் மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடு மூலம் எதிர்காலத்தை ஏற்றுக் கொள்ளல்" | சிங்கப்பூர் | 2018 ஜூலை 8 - 12 |

| | | | |
|---|---|---|---|
| ➢ **17வது உலக சமஸ்கிருத மாநாடு** | உலக அளவில் சமஸ்கிருத மொழியைப் பாதுகாத்தல், வளர்த்தெடுத்தல், பேச்சு வழக்கில் பயன்படுத்துதல் என்பன இம்மாநாட்டின் நோக்கமாகும். | வான்கூவர் (Vancouver), கனடா | 2018 ஜூலை 9 - 13 |
| ➢ **டெல்லி பேச்சு வார்த்தையின்10-வது பதிப்பு** (10th edition of Delhi dialogue) | **கருத்துரு** : இந்தியா - ஆசியான் (ASEAN) நாடுகளுக்கிடையிலான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் | புதுதில்லி | 2018 ஜூலை 19 |
| ➢ **கூகுளின் திரள் நெக்ஸ்ட்** 2018 (Google's Cloud Next 2018) | Edge TPU மற்றும் Cloud IoT Edge என்னும் இரண்டு புதிய 'செயற்கை நுண்ணறிவுச் சில்லுகள்' (Artificial Intelligence Chips) இம்மாநாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டன. இவை நுண்ணறிவுத் திறன் கொண்ட சாதனங்களை சிறிய அளவில் வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவதை உறுதி செய்கின்றன. | சான் பிரான்சிஸ்கோ, USA | 2018 ஜூலை 26 |
| ➢ **இரண்டாவது இளம் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாடு** (2nd Young Superintendent of Police Conference) | கருத்துரு : "முன்னறியும் திறனுடன் கூடிய காவல் மற்றும் இந்தியக் காவல் துறையின் தற்கால சவால்கள்" | புதுதில்லி | 2018 ஜூலை 26 |
| ➢ **முதலாவது இந்திய சுற்றுலா சந்தை** (India Tourism Mart) | மத்திய சுற்றுலா அமைச்சகமானது (Ministry of Tourism) "இந்திய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்" சங்கங்களின் கூட்டிணைவுடன் (Federation of Associations in Indian Tourism and Hospitality - FAITH) இணைந்து முதலாவது இந்திய சுற்றுலா சந்தையினை (India Tourism Mart) நிறுவியுள்ளது. | புதுதில்லி | 2018 செப்டம்பர் 16 - 18 (நடைபெற உள்ளது) |

| | | | |
|---|---|---|---|
| ➢ **மாற்றுத் திறனாளி-களுக்கான சர்வதேச மாநாடு 2018** (Global Disability Summit 2018) | ஐக்கியக் குடியரசானது (UK) மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச கூட்டணி (International Disability Alliance) மற்றும் கென்ய அரசுடன் இணைந்து இம்மாநாட்டினை நடத்தியுள்ளது. மாற்றுத் திறனாளிகளை சமுதாய நீரோட்டடத்தோடு இணைப்பதற்கான உலகளாவிய முயற்சிகளை முடுக்கி விடுவதே இம்மாநாட்டின் நோக்கமாகும். | ராணி எலிசபெத் ஒலிம்பிக் பூங்கா, லண்டன் | 2018 ஜூலை 24 |

## திட்டங்கள்

| திட்டங்கள் | நோக்கம்/செய்திகளில் வந்ததன் காரணம் | அமைச்சகம்/ காபினெட் | நாள் |
|---|---|---|---|
| ➢ **சஞ்சார் கிராந்தி யோஜனா** (Sanchar Kranti Yojana) | மாநிலம் முழுவதிலும் உள்ள கிராமப்புற குடும்பங்கள், நகர்ப்புற ஏழைகள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக 50 லட்சம் திறன்பேசிகள் (50 Lakh Smart Phones) வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். | சத்தீஸ்கர் மாநில அரசால் தொடங்கப்பட்ட திட்டம் | 2018 ஜூலை 27 |
| ➢ **ஒரு விவசாயி ஒரு மின்மாற்றி** (One Farmer One Transformer) | மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 2 லட்சம் விவசாயிகளுக்கு உயர் மின்னழுத்த மின் பகிர்மானம் அளிக்கப்பட்டு, மின்மாற்றி மூலம் மின்னிழப்பு குறைக்கப்படுகிறது. | மகாராஷ்டிர மாநில அரசால் தொடங்கப்பட்ட திட்டம் | 2018 ஆகஸ்டு 15 முதல் செயல் பாட்டுக்கு வருகிறது |
| ➢ **ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் 2018** (Swachh Survekshan Grameen 2018) | கிராமப்புற தூய்மை மற்றும் சுகாதாரம் பற்றிய கணக் கெடுப்பான இது, அனைத்து மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலும் அவற்றின் துப்புரவு சார்ந்த தரம் மற்றும் அளவீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது | மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தினால் தொடங்கப்பட்ட திட்டம் | 2018 ஜூலை 13 |
| ➢ **பசுமை மகாநதி திட்டம்** | இது மகாநதி மற்றும் அதன் துணை ஆறுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் 2 கோடி மரக் கன்றுகளை நடும் திட்டம் ஆகும். | ஒடிசா மாநில அரசால் தொடங்கப்பட்ட திட்டம் | 2018 ஜூலை 24 |

| | | | |
|---|---|---|---|
| ➢ **பதே பாரத், பாதே பாரத்** (Padhe Bharat, Badhe Bharat) | மாணவர்கள் மத்தியில் இந்தியக் கலாச்சாரம் தொடர்பான வாசிப்பின் ஊக்கப்படுத்து வதற்காக இத்திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது. இது ஆரம்பநிலை முதல் 12ஆம் வகுப்பு வரையிலான பள்ளிக் கல்விக்கான "சமக்ரா சிக்ஷா" எனும் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. | மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தினால் (Ministry of Human Resource Development) தொடங்கப்பட்ட திட்டம் | 2018 ஜூலை 17 |

**2018 ஜூலை மாதம் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்:**

| பயிற்சியின் பெயர் | பங்கேற்ற நாடுகள் | பயிற்சியின் வகை | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|---|
| ➢ **பிட்ச் பிளாக் – 18** (Pitch Black-18) முதல்முறையாக இந்திய வான்படை (IAF) பங்கேற்ற பயிற்சி | இந்தியாவுடன் சேர்த்து 12 நாடுகள் இப்பயிற்சியில் பங்கேற்றன. | பலதரப்பு வான்படைப் பயிற்சி (Multilateral Air Force Exercise) | ஆஸ்திரேலியா | 2018 ஜூலை 27 முதல் 17 வரை நடைபெற்றது. |

**2018 ஜூலை மாதத்தில் விண்ணில் ஏவப்பட்ட இராக்கெட்டுகள்:**

| செயற்கைக் கோள்கள் | விண்ணில் செலுத்திய நாடு | ஏவு வாகனம் (Launch Vehicle) | நோக்கம் | நாள் |
|---|---|---|---|---|
| ➢ **PRSS - 1 & PakTes-1A** | பாகிஸ்தான் | Long March - 2C (சீனாவால் விண்ணிற்கு செலுத்தப் பட்டது) | PRSS-1: இது சீனாவால் பாகிஸ்தானுக்கு விற்கப்பட்ட ஒளியியல் தொலை நுண்ணுணர்வு செயற்கைக் கோள் (Optical remote sensing satellite) ஆகும்.<br>PakTES-1A: இது பாகிஸ்தான் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அறிவியல் பரிசோதனைச் செயற்கைக் கோள் (Scientific Experiment Satellite) ஆகும். | 2018 ஜூலை 9 |

## பாதுகாப்பு மற்றும் விண்வெளி:

1) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக போர் விமானமான **தேஜஸ்** (Tejas Fighter Aircraft) **தமிழ்நாட்டிலுள்ள சூலூர் விமானப் படை தளத்திலிருந்து** செயல்பாட்டுக்கு வந்தது.

2) **இந்தோனேசியாவின் சபாங்க் துறைமுகத்தில்** (Port of Sabang) நுழைந்த முதல் இந்தியப் போர்க்கப்பல் **ஐ.என்.எஸ். சுமித்ரா** (INS Sumitra) ஆகும்.

3) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) உயர் உந்துதிறன் கொண்ட (high thrust version) **விகாஸ் எந்திரத்தினுடைய** செயல்பாட்டுச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

| **புதிய கண்டுபிடிப்புகள் (New Discoveries)** | **வகை/ நோக்கம் (Type/purpose)** | **இடம் (Place)** |
|---|---|---|
| ➢ **ஆர்க்கிட் டிட்** (Archid Tit)<br>➢ **நீலகிரி டிட்** (Nilgiri Tit)<br>➢ **ஆரஞ்சு அலெர்ட்** (Orange alert) | வண்ணத்துப் பூச்சி (Butter fly) | கும்பக்கரை, தேனி மாவட்டம் |
| ➢ **உலகின் முதலாவது முப்பரிமான வண்ண X-கதிர்** (World's first ever 3D, colour X-ray) | இந்தப் புதிய வகை X- கதிரானது மனிதர்களில் ஏற்படும் நோய்களைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த (improve the field of medical diagnostic) உதவுகிறது. | நியூசிலாந்து |
| ➢ **உலகின் மிக வேகமான சுழலி** (World's fastest rotor) | இந்தச் சுழலியானது நிமிடத்திற்கு 60 பில்லியனுக்கும் மேற்பட்ட சுழற்சிகளை (60 Billion revolutions per minute) மேற்கொள்ளக் கூடியது; மனிதனால் உருவாக்கப்பட்ட அறிவியல் சாதனங்களிலேயே மிகவும் வேகமானது. மேலும், இது அதிவேக பல்துளையிடும் எந்திரத்தை விட (high speed dental drill) ஒரு லட்சம் மடங்கு வேகமானது ஆகும். | அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) |

| | | |
|---|---|---|
| ➢ **பாம்பாலி** (Bombali) | சியர்ரா லியோன் நாட்டிலுள்ள வட பாம்பாலி பகுதியில் உள்ள வௌவால்களில் காணப்படும் புதிய வகை எபோலா வைரஸ்களை (new strain of Ebola virus in bats) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். | சியர்ரா லியோன் (Sierra Leone), மேற்கு ஆப்பிக்கா |
| ➢ **ஸ்கூட்டாய்டு** (Scutoid) **வடிவம் கொண்ட எபிதீலியல் செல்கள்** (Epithelial cells) | ஸ்கூட்டாய்டு என்பது ஐந்து பக்கங்களை ஒரு புறமும் ஆறாவது பக்கத்தினை மறுபுறமும் கொண்ட அதன் நீண்ட விளிம்புகளில் முக்கோண வடிவ மேற்பரப்பினைக் கொண்ட ஒரு புதிய வடிவமாகும். | |
| ➢ **ஹிக்ஸ் போசான்** (Higgs Boson) | கடவுள் துகள் (God particle) | |
| ➢ **எபிடையோலக்ஸ்** (Epidiolex) | உலகிலேயே முதன்முறையாக, மரிஜீவானாவிலிருந்து தயாரிக்கப்படும் கஞ்சா போன்ற போதைத்தன்மை கொண்ட "எபிடையோலக்ஸ்" (Epidiolex) என்ற மருந்துப் பொருளுக்கு 'அமெரிக்க உணவு மற்றும் மருந்துப் பொருள் நிர்வகிப்பு அமைப்பானது' (US Food and Drug Administration) அனுமதி வழங்கியுள்ளது. | |

1) தேர்தல் சமயங்களில் நடைபெறும் தேர்தல் நடத்தை விதி மீறல்களைப் (Violations of the Model code of conduct) பற்றிப் புகார் செய்யும் பொருட்டு பொது மக்களுக்காக **சி-விஜில்** எனும் கைபேசிச் செயலியானது (cVIGIL Mobile App) இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

2) **விங்க்ஸ் கைபேசிச் செயலியின்** (WINGS App) மூலம் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் எந்தவொரு உள்நாட்டு அல்லது சர்வதேச தொலைபேசி எண்ணுக்கும் எளிதில் அழைப்பு விடுக்க முடியும். மேலும், பி.எஸ்.என்.எல் (BSNL) நிறுவனமானது இந்தியாவிலேயே முதன்முறையாக இந்த **இணைய தொலைபேசிச் சேவையை (Internet Telephony Service)** அறிமுகப்படுத்தியுள்ளது.

3) தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழுவானது (Standing Committee of National Board for Wildlife) **வடக்கு நதி டொராபின் ஆமை** (Northern River Terrapin), **மேகச் சிறுத்தை** (Clouded Leopard) **அரபிக்கடல் ஹம்பேக் திமிங்கலம்** (Arabian Sea Humpback Whale) மற்றும் **செந்நிற பாண்டா கரடி**

(Red Panda) ஆகிய நான்கு உயிரினங்களை **மத்திய அரசின் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள விலங்குகளுக்கான மீட்புத் திட்டத்தில்** (Centre's Recovery Programme for Critically Endangered Species) சேர்த்துள்ளது. இவ்வுயிரினங்கள் மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் (MOEFCC) வன உயிர்ப் பிரிவானது (Wildlife Division) அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கண்ட பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

4) **செந்நிற நிலவு** (Blood Moon 2018) என்று அழைக்கப்பட்ட இந்த நூற்றாண்டின் மிக நீண்ட சந்திர கிரகமானது (Century's longest lunar eclipse) 2018 ஜூலை 27 அன்று நிகழ்ந்தது. இந்த சந்திர கிரகணமானது 1 மணி நேரம் 43 நிமிடங்கள் நீடித்தது.

5) 1.1 பில்லியன் ஆண்டுகள் தொன்மை வாய்ந்த உலகின் மிகவும் பழமை வாய்ந்த **'பிரகாசமான இளஞ்சிவப்பு' (bright pink pigment) நிறமானது** சஹாரா பாலைவனத்தின் ஆழமான பாறைகளிலிருந்து ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

6) தென் துருவத்தில் உள்ள ஐஸ் கியூப் ஆய்வகமானது (Icecube Observatory), அதன் மையத்தில் மிகப்பெரிய கருந்துளையைக் கொண்ட அண்டமான **பிளேசர்** (blazar, a galaxy with a super massive black hole at its centre) என்பதிலிருந்து நியூட்ரினோக்கள் வெளிப்படுவதைக் கண்டறிந்துள்ளது.

7) மங்களூரில் உள்ள கஸ்தூரிபாய் மருத்துவக் கல்லூரியில் (Mangaluru Kasturba Medical College) உள்ள மருத்துவர் குழுவானது இந்தியாவிலேயே முதன்முறையாக **"pp அல்லது p null ஃபீனோடைப்" (p null phenotype)** என்னும் புதிய இரத்த வகை மாதிரியைக் கண்டறிந்துள்ளது.

8) 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே மலரக்கூடிய நீலக்குறிஞ்சி மலர்கள் மூணாறு அருகிலுள்ள ஆனைமலைப் பகுதியில் பூத்துக் குலுங்கத் தொடங்கியுள்ளன.

9) 2018 ஜூலை 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் செவ்வாய்க் கிரகமானது புவிக்கோளுக்கு மிக அருகில் வந்து சென்றது.

## பொருளாதாரம்

1) **சுலபமாகத் தொழில் தொடங்க ஏதுவான** (Ease of doing business rankings) **மாநிலங்களின் தரவரிசைப் பட்டியல்:**

- ஆந்திரப் பிரதேசம் - முதல் இடம்
- தெலுங்கானா - இரண்டாவது இடம்
- ஹரியானா - மூன்றாவது இடம்
- தமிழ்நாடு - 15-வது இடம்

(இப்பட்டியலினை, மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறையின் கீழ் உள்ள தொழிலகக் கொள்கை மற்றும் ஊக்குவித்தல் துறையும் உலக வங்கியும் இணைந்து தயாரித்து உள்ளன.)

2) இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (Insurance Regulatory and Development Authority of India) 16 உறுப்பினர்கள் அடங்கிய **P.J. ஜோசப்** குழுவினை அமைத்துள்ளது. இக்குழுவானது மோட்டார் வாகனத்தின் மூன்றாம் தரப்பு காப்பீட்டு விலை நிர்ணய அம்சங்களைப் பற்றி ஆராயவும் (Motor third party insurance pricing aspects), 2019-20ம் ஆண்டுக்கான தவணைத் தொகை (premium rate) குறித்த பரிந்துரைகளை வழங்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

3) **உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு** (World Intellectual Property Organisation) வெளியிட்டுள்ள **உலகப் புத்தாக்கக் குறியீட்டில்** (Global Innovation Index 2018) இடம்பெற்றுள்ள **130 நாடுகளில் இந்தியா 57-வது** இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலாவது இடத்தில் உள்ளது.

4) **உலக வங்கியானது** வெளியிட்டுள்ள அறிக்கையின்படி பிரான்சை பின்னுக்குத் தள்ளி **இந்தியா உலகின் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரமாக** உருவெடுத்துள்ளது. இதில் அமெரிக்கா முதலாவது இடத்தில் உள்ளது.

5) ஐரோப்பிய மீள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியின் (European Bank for Reconstruction and Development) **69-வது உறுப்பினராக இந்தியா** இணைந்துள்ளது.

6) பெங்களூரைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனமான பொது விவகாரங்கள் மையமானது (Public Affairs Centre) **பொது விவகாரங்கள் குறியீடு** - 2018 ஐ (Public Affairs Index 2018) 2018 ஜூலை 22 அன்று வெளியிட்டது. இதன்படி சிறப்பான முறையில் ஆட்சி நடைபெறும் மாநிலங்களில் கேரளா முதலாவது இடத்திலும் **தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும்** உள்ளன.

## விருதுகள்

| **விருதுகள்/ பரிசுகள் (Awards/Prizes)** | **ஆளுமை/ அமைப்பு (Person/Organisation)** |
|---|---|
| ➢ **ராமன் மகசேசே விருது** 2018 (வெற்றி பெற்ற ஆறு பேரில் இரண்டு பேர் இந்தியர்கள் ஆவர்) | • பரத் வத்வனி (Bharat Vatwani) - இந்தியா<br>• சோனம் வாங்க்சுக் (Sonam Wangchuk) - இந்தியா<br>• யூக் சங்க் (Youk Chhang) - கம்போடியா<br>• மரியா டி லூர்டெஸ் மார்ட்டின்ஸ் குரூஸ் (Maria de Lourdes Martins Cruz) - கிழக்கு தைமூர் |

| | |
|---|---|
| | • ஹோவர்ட் டீ (Howard Dee) - பிலிப்பைன்ஸ்<br>• வோ தி ஹோங் யென் (Vo Thi Hoang Yen) - வியட்நாம் |
| ➢ **2018 கேட்கும் திறன் அற்றவர்களுக்கான மிஸ் ஆசியா** (2018 Miss Asia Deaf) | • மத்தியப் பிரதேசத்தின் திகம் காரைச் சேர்ந்த தேஷ்னா ஜெயின் (Desha Jain) |
| ➢ **காளிதாஸ் சம்மன் விருது** | • **அஞ்சோலி எலா மேனன்** (Anjolie Ela Menon) (கலை, நாடகம், இசை போன்றவற்றுக்காக வழங்கப்படும் மத்தியப் பிரதேச மாநிலத்தின் மிக உயரிய விருது) |
| ➢ **சங்கீத கலாநிதி விருது** 2018 | • மெட்ராஸ் மியூசிக் அகாடமியின் 2018ஆம் ஆண்டுக்கான சங்கீத கலாநிதி விருதிற்கு, கர்நாடக இசைக்கு அளப்பரிய பங்களித்த பாடகி அருணா சாய்ராம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். |
| ➢ 2018 **தங்க மேன் புக்கர் பரிசு** (2018 Golden Man Booker Prize)<br>(இவ்விருதானது மேன் புக்கர் பரிசின் 50 ஆண்டு விழாவின் நினைவாக உருவாக்கப்பட்டுள்ளது.) | • **மைக்கேல் ஒன்டாட்ஜேவுக்கு** (Michael Ondaatje) அவர் எழுதிய **"The English Patient" என்னும் நாவலுக்காக** வழங்கப்பட்டது. |

## நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்

1) **புதிதாகப் பொறுப்பேற்ற தேசத் தலைவர்கள்:**

| நாடு | அதிபர்/பிரதமர் |
|---|---|
| மெக்சிகோ | என்ரிக் பெனா நியட்டோ (Enrique Pena Nieto) |

2) தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் (National Green Tribunal) தலைவராக நீதியரசர் **ஆதர்ஷ் குமார் கோயல் (Justice Adarsh Kumar Goel)** நியமிக்கப்பட்டுள்ளார்.

3) மகாராஷ்டிராவைச் சேர்ந்த "பிரன்ஜல் பாட்டில்" (Pranjal Patil) எனும் பெண்மணி இந்தியாவின் முதல் பார்வையற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியாகக் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தற்சமயம் இவர் கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தினுடைய துணை ஆட்சியராகப் பணியாற்றுகிறார்.

4) **தஹிரா சஃப்தர்** (Tahira Safdar) என்பவர் பாகிஸ்தானில் உள்ள ஒரு உயர்நீதிமன்றத்தில் பொறுப்பேற்கும் முதலாவது பெண் தலைமை நீதிபதி (First ever female high court chief justice) என்ற பெருமையைப் பெறுகிறார்.

5) அர்ஜெண்டினா - சிலி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான எரிமலையான **ஓஜோஸ் டெல் சாலடோ** (Mt Ojos del Salado - 6893m) மலையை அடைந்த இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை **சத்யரூப் சித்தாந்தா** (Satyarup Siddhanta) பெறுகிறார். இம்மலையை அடைந்த முதல் இந்திய வீரர் மல்லி மஸ்தான் பாபு (Malli Mastan Babu) ஆவார்.

6) 'சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பின்' (International Organization for Migration) புதிய இயக்குநர் ஜெனரலாக **போர்ச்சுகலைச்** சேர்ந்த **அன்டானியோ விட்டோரினோ** (Antonio Vitorino) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

7) மத்திய மறைமுக மற்றும் சுங்க வரிக்கான வாரியத்தின் (Central Board of Indirect Taxes and Customs) புதிய தலைவராக **S. ரமேஷ்** நியமிக்கப்பட்டுள்ளார்.

8) உலக விவகாரங்களுக்கான இந்தியக் கவுன்சிலின் (Indian Council of World Affairs) புதிய இயக்குநர் ஜெனரலாக **TCA. ராகவன்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்

1) **"Gandhi : The years that changed the world (1914-1948)"** என்ற புத்தகத்தினை **ராமச்சந்திர குஹா** எழுதியுள்ளார்.

2) **"Eleventh Hour"** என்னும் புத்தகத்தினை **ஹூசைன் ஜெய்தி** (Hussain Zaidi) எழுதியுள்ளார்.

3) **"Winning Like Sourav : Think and Succeed Like Ganguly"** என்ற புத்தகத்தினை **அபிரூப் பட்டாச்சார்யா** (Abhirup Bhattacharya) எழுதியுள்ளார்.

4) **"Aluminium : The Future Metal"** என்ற புத்தகத்தினை **தபன் குமார் சந்த்** (Tapan Kumar Chand) எழுதியுள்ளார்.

5) **"The House of Islam : A Global History"** என்ற புத்தகத்தினை எட் **ஹூசைன்** (Ed Husain) எழுதியுள்ளார்.

6) **"The Dhoni Touch : Unravelling the enigma that is Mahendra Singh Dhoni"** என்ற புத்தகத்தினை **பரத் சுந்தரேசன்** (Bharat Sundaresan) எழுதியுள்ளார்.

7) **"When Coal Turned Gold : The Making of a Maharatna Company"** என்னும் புத்தகத்தினை **P.B. பட்டாச்சார்யா** எழுதியுள்ளார்.

## விளையாட்டு

1) கிரிக்கெட் போட்டி வரலாற்றிலேயே முதல்முறையாக **1000-வது டெஸ்ட் கிரிக்கெட்டில்** கால்பதித்த அணி என்ற பெருமையை **இங்கிலாந்து கிரிக்கெட் அணி** பெற்றுள்ளது. இங்கிலாந்து அணியானது தனது 1000-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை எதிர்கொண்டது. இங்கிலாந்து கிரிக்கெட் அணியானது 1877-ம் ஆண்டு தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியினை ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடியது குறிப்பிடத்தக்கது ஆகும்.

2) துருக்கியிலுள்ள மெர்சினில் (Mersin, Turkey) நடைபெற்ற உலக ஜிம்னாஸ்டிக்ஸ் சேலஞ்ச் கோப்பைப் போட்டியில் (Gymbnastics World Challenge Cup) **தீபா கர்மாகர்** (Dipa Karmakar) தங்கப் பதக்கம் வென்றுள்ளார். மேலும், இப்போட்டியில் தங்கம் வெல்லும் முதல் இந்தியப் பெண்மணி இவரே ஆவார்.

3) இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ராகுல் திராவிட் மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங் ஆகியோர் கிரிக்கெட்டிற்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்காக அவர்கள் இருவரும் **ஐ.சி.சி கிரிக்கெட் ஹால் ஆஃப் ஃபேம்** (ICC Cricket Hall of Fame) பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

4) **விம்பிள்டன் டென்னிஸ் :** 2018 (ஜூலை 2 - ஜூலை 15), லண்டன், U.K:

| | |
|---|---|
| ➢ ஆடவர் ஒற்றையர் (Men's Singles) | நோவாக் ஜோகோவிச் (Novak Djokovic) (செர்பியா) - வெற்றி<br>எதிர்<br>கெவின் ஆன்டெர்சன் (தென் ஆப்பிரிக்கா) |
| ➢ மகளிர் ஒற்றையர் (Women's Singles) | ஏஞ்சலிக் கெர்பர் (Angelique Kerber) (ஜெர்மனி) - வெற்றி<br>எதிர்<br>செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) |
| ➢ ஆடவர் இரட்டையர் (Men's Doubles) | மைக் பிரையான் (Mike Bryan) மற்றும் ஜாக் சோக் (Jack Sock) (அமெரிக்கா) - வெற்றி<br>எதிர்<br>ராவென் கிளாசன் (Raven Klaasen) (அமெரிக்கா) மற்றும் மைக்கேல் வீனஸ் (Michael Venus) (நியூசிலாந்து) |
| ➢ மகளிர் இரட்டையர் (Women's Doubles) | பார்போரா கிரெஜ்சிகோவா (Barbora Krejcikova) மற்றும் காத்ரீனா சினாய்கோவா (Katerina Siniakova) (செக் குடியரசு) - வெற்றி<br>எதிர்<br>நிக்கோல் மெலிச்சர் (Nicole Melichar) (அமெரிக்கா) மற்றும் கிவெட்டா பெஷ்கே (Kveta Peschke) (செக் குடியரசு) |

5) **நெதர்லாந்தில்** நடைபெற்ற 2018-ஆம் ஆண்டுக்கான **ஆடவர் ஹாக்கி சாம்பியன் கோப்பைத் தொடரின்** (2018 Men's Hockey Champions Trophy) இறுதிப்போட்டியில் **இந்தியாவை வீழ்த்தி ஆஸ்திரேலிய அணி** சாம்பியன் பட்டம் வென்றது.

6) 2018-ஆம் ஆண்டுக்கான 12வது மலேசிய ஓப்பன் பாட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் (Malaysian Open Badminton Men's Singles 2018) **லீ சாங் வெய்** (Lee Chang Wei) சாம்பியன் பட்டம் வென்றார்.

7) சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் (ODI Cricket) மிக வேகமாக 1000 ரன்களை எட்டிய வீரர் (Fastest player to score 1000 runs) என்ற சாதனையை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஃபகர் ஜமான் (Fakar zaman) நிகழ்த்தியுள்ளார்.

8) **15வது தேசிய இளையோருக்கான தடகளப் போட்டிகளில்** (15th National Youth Athletics Championships 2018) பஞ்சாப்பைச் சேர்ந்த **குண்டு எறிதல்** வீரரான **தன்வீர் சிங்** (Dhanvir Singh) சிறந்த ஆண் தடகள வீரராகத் (Best male athlete) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்தப் போட்டியானது **குஜராத்தின் வடோதராவில்** நடைபெற்றது.

9) விளாடிவோஸ்டோக்கில் நடைபெற்ற ஆடவருக்கான ரஷ்ய ஓப்பன் பாட்மிண்டன் போட்டியில் (2018 Men's Singles Russian Open Badminton Trophy) இந்திய பேட்மின்டன் வீரரான **சவுரப் வர்மா** (Saurabh Verma) சாம்பியன் பட்டம் வென்றார்.

10) இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் 2018 ஜூலை 22 அன்று நடைபெற்ற ஆசிய பாட்மிண்டன் ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் (Men's Singles at Asia Badminton Junior Championship 2018) 53 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவைச் சேர்ந்த 'லக்ஷ்யா சென்' (Lakshya Sen) தங்கப் பதக்கம் வென்றார். [இதன் முன்னர், 1965ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஆடவர் ஒற்றையர் பிரிவில் கவுதம் தக்கார் (Gautam Thakkar) தங்கம் வென்றார்]

11) புது தில்லியில் 2018 ஜூலை 18 அன்று நடைபெற்ற ஆசிய ஜூனியர் சாம்பின்ஷிப் போட்டியில் (Asian Junior Championship 2018) கிரேக்க-ரோமன் மல்யுத்தத்தின் 97 கிலோ எடைப்பிரிவில் (97kg Greco - Roman Wrestling Category) இந்தியாவைச் சேர்ந்த **வீரேஷ் குண்டு** (Viresh Kundu) வெண்கலப் பதக்கம் வென்றார்.

## முக்கிய தினங்கள்

| தினம் (Days) | நிகழ்வுகள் (Events) | கருத்துரு/முக்கியத்துவம் (Theme/Significance) |
|---|---|---|
| ஜூலை 1 | தேசிய மருத்துவர்கள் தினம் (National Doctor's Day) | "மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளின் மீதான வன்முறைக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை" (Zero tolerance to violence against doctors and clinical establishment) |
| ஜூலை 1 | சரக்கு மற்றும் சேவை வரி தினம் (Goods and Service Tax Day) | GST வரி விதிக்கப்பட்டதன் முதலாம் ஆண்டு நினைவாகக் கொண்டாடப் படுகிறது. |
| ஜூலை 6 | உலக விலங்கு வழி நோய்கள் தினம் (World Zoonoses Day) | விலங்கு வழி பரவும் நோய்கள் பற்றியும், அவற்றினைத் தடுக்கும் முறைகள் பற்றியும், நோய் ஏற்படும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்த இந்தத் தினமானது உதவுகிறது. |
| ஜூலை 7 | சர்வதேச கூட்டுறவு அமைப்புகள் தினம் (International Day of Co-operatives) | "ஒத்துழைப்பின் மூலம் நிலையான சமூகத்தினைப் பெறுதல்" (Sustainable Societies through cooperation) |
| ஜூலை 7 | உலக சாக்லேட்டுகள் தினம் (World Chocolate Day) | இந்தத் தினமானது 2009 முதல் ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. |
| ஜூலை 11 | உலக மக்கள் தொகை தினம் (World Population Day) | "குடும்ப கட்டுப்பாடு என்பது மனித உரிமையாகும்" (Family Planning is a human right) |
| ஜூலை 12 | சர்வதேச மலாலா தினம் (International Malala Day) | அமைதிக்கான நோபல் விருதினை வென்ற பாகிஸ்தானைச் சேர்ந்த கல்வியியல் செயற்பாட்டாளர் மலாலா யூசுப்சாயின் (Malala Yousafzai) பெயரில் இத்தினமானது கொண்டாடப்படுகிறது. |
| ஜூலை 15 | இளைஞர்கள் திறனுக்கான சர்வதேச தினம் (World Youth Skills Day) | "தொழில்நுட்ப மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த கல்வி மற்றும் பயிற்சியின் நிலையினை மேம்படுத்துதல்" (Improving the image of TVET [Technical & Vocational Education and Training]) |

| | | |
|---|---|---|
| ஜூலை 15 | கல்வி வளர்ச்சி நாள் (Education Development Day) | தமிழக முன்னாள் முதல்வர் K. காமராஜரின் 116-வது பிறந்த தினம் (ஜூலை 15, 2018) (முதன் முதலாக 2006 ஜூலை 15 அன்று கொண்டாடப்பட்டது) |
| ஜூலை 15 | மறைமலை அடிகள் பிறந்த தினம் | தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை |
| ஜூலை 17 | சர்வதேச நீதி தினம் (International Justice Day) | இந்த நாளின் நோக்கம் நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களை ஒருங்கிணைப்பதும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதும் ஆகும். |
| ஜூலை 23 | சுப்ரமணிய சிவா நினைவு தினம் | சுதந்திரப் போராட்ட வீரரான இவர் ஞானபானு என்ற இதழையும் இராமானுஜ விஜயம், மாதவ விஜயம் என்ற புத்தகங்களையும் எழுதியுள்ளார். |
| ஜூலை 24 | தேசிய வருமான வரி தினம் (National Income Tax Day) | வருமான வரி செலுத்துவதின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப் படுகிறது. |
| ஜூலை 26 | 19-வது கார்கில் விஜய் திவாஸ் | 1999-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் இடையிலான கார்கில் போரின் போது செயல்படுத்தப்பட்ட ஆபரேஷன் விஜய்யின் (Operation Vijay) வெற்றியை நினைவு கூறும் வகையிலும் அதில் உயிர்நீத்த இராணுவ வீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது. |
| ஜூலை 28 | உலக ஹெப்படைட்டிஸ் தினம் (World Hepatitis Day) | "ஹெப்படைட்டிசுக்கான சோதனை மற்றும் சிகிச்சை அளித்தல்" (Test. Treat.Hepatitis) |
| ஜூலை 29 | சர்வதேச புலிகள் தினம் (International Tiger Day/Global Tiger Day) | "புலிகளின் வாழ்க்கை நமது கைகளில்" (Their Survival is in our hands) |
| ஜூலை 30 | மனிதர்கள் கடத்தப்படுவதற்கு எதிரான சர்வதேச தினம் (World Day against Trafficking in persons) | "குழந்தைகள் மற்றும் இள வயதினர் கடத்தப்படுதலுக்கு எதிராக செயல்படுதல்" (Responding to the trafficking of children and young people) |